# தி கோவை மெயில்

தமிழ் & ஆங்கில வார இதழ்

RNI: TNBIL/2014/55455 | Postal Reg.No: CB/123/2021-23.

கோவை | சென்னை | திருப்பூர் | ஊட்டி | குன்னூர் | கோத்தகிரி | பொள்ளாச்சி | பழனி

Vol No. : 10 Issue No. : 28 www.covaimail.com www.facebook.com/THE COVAI MAIL ஞாயிறு, அக் 8 - 14, 2023, 8 பக்கங்கள், ரூ.5/- ஆண்டு சந்தா - ரூ.260/-



ஸ்ரீ கணபதி மார்ட்
தரம். தலைமுறைக்கும்...

Sri Ganapathy Mart
QUALITY. FOR GENERATIONS...




Scan Here

Our Location

குழந்தைகள் விளையாட்டு பூங்கா



விசாலமான கார் பார்கிங் வசதி



## Sri Ganapathy Mart

#145, 1B1, NPS Nagar, Neelambur, Coimbatore - 62

73973 99911 / 97912 22220

sriganapathymart2009@gmail.com

sriganapathymart

# இந்துஸ்தான் பொறியியல் & தொழில்நுட்ப கல்லூரிக்கு A++ அங்கீகாரம்

## தமிழ்நாட்டில் அதிக மதிப்பெண் 3.69/4 பெற்று சாதனை



தி கோவை மெயில்

இந்துஸ்தான் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிக்கு தேசிய மதிப்பீடு மற்றும் தரச்சான்று அமைப்பின் **(NAAC) A++** அங்கீகாரம் கிடைத்துள்ளது. தமிழ்நாட்டில் அதிக மதிப்பெண் **3.69/4** பெற்ற கல்லூரி என்ற பெருமையை தனதாக்கியுள்ளது.

இந்தியாவின் உயர் கல்வி நிறுவனங்களை மதிப்பிட்டு தரவரிசைப்படுத்தும் அமைப்பான தேசிய மதிப்பீடு மற்றும் தரச்சான்று *(National Assessment and Accreditation Council -NAAC)* அமைப்பின் மூலம் நியமிக்கப்பட்ட மூன்று நபர்கள் கொண்ட குழு கடந்த செப்டம்பர் 26 மற்றும் 27 ஆகிய தேதிகளில் இரண்டு நாட்கள் கல்லூரியின் கல்வி தரம் மற்றும் கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள உள்கட்டமைப்பு வசதிகளை ஆய்வு செய்தார்கள். அதன் முடிவுகள் அண்மையில் அறிவிக்கப்பட்டது.

இதில் இந்துஸ்தான் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி ஏ பிளஸ் பிளஸ் *(A ++)* அங்கீகாரத்தை பெற்றுள்ளது.

இக்கல்லூரியின் பாடத்திட்டம் உள்ளூர், தேசிய, பிராந்திய மற்றும் உலகளாவிய தேவைகளுக்கு ஏற்றவாறு உருவாக்கப்பட்டுள்ளது. இது *POS, PSOs* மற்றும் *Cos* ஆகியவற்றில் பிரதிபலிக்கிறது. மேலும் பாடத்திட்டமானது தொழில்முறை நெறிமுறைகள், மனித மதிப்புகள், சுற்றுச்சூழல் ஆகியவற்றுடன் தொடர்புடையவற்றை ஒருங்கிணைக்கிறது. கூடுதலாக, என்.சி.சி., என்.எஸ்.எஸ். இந்திய அரசியலமைப்பு, ஐ.பி.ஆர்., உலகளாவிய மனித மதிப்புகள், இந்திய பாரம்பரியத்தின் சாராம்சம் தொடர்பான படிப்புகள் கல்லூரி பாடத்திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளன.

*UN-SDGs* இலக்குகள் மற்றும் தொழில்துறை *4.0* பாடத்திட்டங்களை இணைத்து சமூக தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் பாடத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. கூடுதலாக, தேவைகளின் அடிப்படையில் பாடத்திட்டம் திருத்தப்பட்டும் வருகிறது.

மேலும், *CBCS* மற்றும் மாணவர்களின் நலனை மையப்படுத்திய பாடத்திட்டம் மூலம் சிறந்த கற்பித்தல் மற்றும் கற்றல் நடைமுறைகளைப் பின்பற்றுகிறது. தொடக்கத்தில் மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்துகிறது. மறுசீரமைப்பு வகுப்புகள் மற்றும் கூடுதல் பணிகள் மூலம் மெதுவாகக் கற்கும் மாணவர்களை மேம்படுத்த நிறுவனத்தால் சிறப்பு கவனம் செலுத்தப்படுகிறது. நிறுவனத்தின் அனைத்து வகுப்பறைகளும் *ICT* வசதிகளுடன் செயல்படுத்தப்பட்டுள்ளன. மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களிடையே ஆராய்ச்சி நடவடிக்கைகளை உயர்த்துவதற்கு நன்கு நிறுவப்பட்ட ஆராய்ச்சி ஊக்குவிப்புக் கொள்கையை இந்நிறுவனம் கொண்டுள்ளது. ஆசிரியர்களின் ஆராய்ச்சி நடவடிக்கைகள், ஆராய்ச்சி நிதி ஒதுக்கீடு மூலம் நிர்வாகத்தால் ஊக்குவிக்கப்படுகிறது. கூடுதலாக, நிறுவனம் *AICTE IDEA* ஆய்வகம், *MSME* ஆதரவு மையங்கள், *DGCA* அங்கீகரிக்கப்பட்ட விமான பயிற்சி மையமும் நிறுவப்பட்டுள்ளது. இக்கல்வி நிறுவனம் மத்திய அரசின் *DSIR-SIRO* ஆல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சமூகத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக நிறுவனம் பல்வேறு அவுட்ரீச் செயல்பாடுகளை ஊக்குவிக்கிறது. உதாரணமாக, இந்த நிறுவனம் உன்னத் பாரத் அபியான் திட்டத்தின் கீழ் அருகிலுள்ள ஐந்து கிராமங்களை தத்தெடுத்து அந்த கிராமங்களின் தேவைகளை பூர்த்தி செய்துள்ளது. இந்நிறுவனத்தின் முன்னாள் மாணவர் சங்கம் 1975 ஆம் ஆண்டின் தமிழ்நாடு பதிவுச் சங்கங்களின் சட்டம் 27ன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. பெங்களூர், சென்னை மற்றும் கொச்சியில் மூன்று தேசிய அளவிலான முன்னாள் மாணவர் பிரிவுகள் உள்ளன.

டிஜிட்டல் கற்றல் தொழில்நுட்ப உலகில் நடைமுறைப்படுத்தப்படும் புதிய நடைமுறைகள் குறித்து கற்பவர்களுக்கு கல்வி கற்பித்து வளப்படுத்தியுள்ளது. டிஜிட்டல் கற்றலில் வெற்றிக்கான இந்த ஆதாரத்தை *HICET* திறம்பட செயல்படுத்தியுள்ளது இதன் மூலம் மொத்தம் *81,662* ஆன்லைன் சான்றிதழ்கள் பெறப்பட்டுள்ளன.

இந்த நிறுவனம் ஐ.சி.டி. அகாடமியின் அகாடமிக் பார்ட்னர் எக்ஸலன்ஸ் விருது, மேத்வொர்க்ஸின் சிறப்புச் சான்றிதழ், சிறந்த திட்ட விருது, *NIRF 101-150* புதுமைத்துவம் பிரிவில் சிறந்த கல்லூரி உள்ளிட்ட பல விருதுகளை பெற்றுள்ளது.

நாக் ஏ பிளஸ் பிளஸ் அங்கீகாரம் பெற்றதையடுத்து இந்துஸ்தான் கல்லூரியின் நிர்வாக அறங்காவலர் சரஸ்வதி கண்ணையன் தலைமை நிர்வாக அதிகாரி, கல்லூரி முதல்வர், பேராசிரியர்கள், ஆசிரியர்கள் என அனைவரையும் பாராட்டினார்.





# CSR NURSING HOME

Trusted By Over 2.75 Million People

DEPARTMENT OF ANAESTHESIOLOGY & CRITICAL CARE MEDICINE

WELCOMES

16 BEDDED

STATE OF THE ART ICU UNIT

OUR ICU TEAM

- INTENSIVIST • PHYSICIAN • ANAESTHETIST • SURGEON
- PULMONOLOGIST • CARDIOLOGIST
- STAFFS • CRITICAL CARE TECHNICIANS • RESPIRATORY THERAPIST
- PHYSIOTHERAPIST • DIETICIAN • ADMINISTRATION TEAM

BACKED UP BY

- 64 SLICE CT SCAN UNIT
- CATH LAB
- TWIN OPERATION THEATERS
- 6 BEDDED EMERGENCY & CASUALTY UNIT
- DIALYSIS UNIT
- PHARMACY
- RADIOLOGY DEPARTMENT
- DIAGNOSTIC AND INTERVENTIONAL ENDOSCOPY
- LABOUR OT COMPLEX
- ULTRASONOGRAPHY
- DIGITAL X-RAY
- LABORATORY



Dr Praseeda MD (Anaesthesiology)

272, 7TH STREET EXTENSION, GANDHIPURAM, COIMBATORE - 641 012.

Help line: 83001 28777

Sree Annapoorna Sree Gowrishankar
the pride of coimbatore
Restaurant - Sweets - Event Catering

# THE COVAI MAIL

ENGLISH & TAMIL WEEKLY NEWSPAPER

RNI: TNBIL/2014/55455 | Postal Reg.No: CB/123/2021-23.

Covai | Chennai | Tirupur | Ooty | Coonoor | Kothagiri | Pollachi | Palani

Vol No. : 10 Issue No. : 28 | www.covaimail.com www.facebook.com/THE COVAI MAIL | Every Sunday, Oct 8 - 14, 2023, 8 Pages, Rs.5/- | Annual subscription - Rs.260/-

ஸ்ரீ அன்னபூர்ணா ஸ்ரீ கௌரிசங்கர்
கோவையின் பெருமை
ரெஸ்டாரண்ட் - ஸ்வீட்ஸ் - ஈவெண்ட் கேடரிங்



**C.A.Vasuki**
Secretary and Director, KASC

## Kongunadu College Hosts ISRO's Space Expo 2023



*Subbananthan, Deputy General Manager, SAFETY, SDSC SHAR, ISRO, Sriharikota, explains about the satellites to the chief Guest Athappa Manickam, Founder & Chairman of MAK Controls & Systems Pvt. Ltd, Grahadurai, Deputy Director at SDSC SHAR, ISRO, Sriharikota, Dr. Thavamani D. Palaniswami, Secretary, Dr. NGP Arts & Science College and C. A. Vasuki, Secretary and Director of KASC and other guests in the inaugural ceremony of ISRO's WSW 2023 Space Expo at KASC on 5th October, 2023.*

# I want to threaten Americans

**- Athappa Manickam,** Founder & Chairman of MAK Controls & Systems Pvt. Ltd

✍ Madhumitha.R, **THE COVAI MAIL**

Satish Dhawan Space Centre - SHAR, Sriharikota, ISRO in association with Kongunadu Arts & Science College (KASC), organized a Space Exhibition in the 'World Space Week Celebrations 2023' with the theme "Space and Entrepreneurship" from 5th to 7th October, 2023, in KASC Campus. Athappa Manickam, Founder & Chairman of MAK Controls & Systems Pvt. Ltd, Coimbatore, was present as the Chief Guest while Grahadurai, Deputy Director at SDSC SHAR, ISRO, Sriharikota, graced the event as the Guest of Honour and inaugurated the expo. Lekeshmanaswamy, Principal, welcomed attendees, setting the stage for an enlightening discourse.

In the valedictory session, Shanmuganathan, Former Governor of Meghalaya, Manipur and Arunachal Pradesh, graced as the Chief Guest. Many competitions were previously held for school students as part of World Science Week 2023, and prizes were distributed to all the students during the event.

When he started a company, his focus was clear, to avoid manufacturing or inventing anything already existing in the country. He believed in enhancing productivity without additional costs, even in seemingly small control equipment for the textile industry.

He underlined India's preparedness to defend against any threat, asserting, "We are fully equipped to face any threat across the world, don't worry about China; it is peanuts for us today. We have missiles ready to go and strengthen further."

He recalled a story behind the establishment of his company, "In



1986, America used to hire skilled people from India, calling it 'Body-Shopping.' I didn't like it, and started MAK Software System Ltd just to threaten them that we wouldn't send our engineers to their country; they should come to ours for development."

"We are fully equipped to face any threat across the world, don't worry about China; it is peanuts for us today. We have missiles ready to go and strengthen further"

He shared his optimism for India's future, foreseeing a shift in the job market. "What I'm anticipating is that in another 5 to 10 years, we'll have a shortage of manpower," he predicted. With satellite technology, he saw the potential to revolutionize agriculture, providing the means to feed the world.



### Business Knowledge is essential

**- Grahadurai,** Deputy Director, SDSC SHAR, ISRO, Sriharikota

Shedding light on the ISRO's remarkable achievements, he stated the impressive track record and the future prospects of space exploration.

Grahadurai mentioned that this year's outreach program spanned across eight locations, showcasing ISRO's commitment to engaging with communities.

He also stressed the importance of inspiring young minds, stating that World Space Week aims to excite the youth about space exploration. "We believe that business knowledge and analysis are also essential to inspire the younger generation and address the needs of space exploration," he added.

In a nod to the increasing demand for satellite technology, he mentioned Amazon's ambitious project to launch 3,246 satellites to provide high-speed internet access worldwide. He highlighted the growing necessity for satellite technology and underscored that meeting these requirements would be impossible without the involvement of private players in the space industry.



### Solutions to Societal Challenges

**- Dr. Thavamani D. Palaniswami,** Secretary, Dr. NGP Arts & Science College

By underscoring how science and technology have played a pivotal role in various sectors, she said it leads to advancements in Indian agriculture through digitalization and precise agricultural practices, as well as progress in renewable energy sources.

She stressed the importance of the younger generation's concentration on these fields, particularly mathematics.

Expressing concerns about a shifting focus away from fundamental science to technology-centric pursuits, he remarked, "We have observed the younger generation's increasing fascination with technology while potentially neglecting foundational scientific knowledge. It is crucial to reverse this trend."

She pointed out that space technology offers solutions to many societal challenges, including the creation of integrated healthcare systems, increased employability, and an improved quality of life.



### Educating Future Space Enthusiasts

**- Subbananthan,** Deputy General Manager, SAFETY, SDSC SHAR, ISRO, Sriharikota, Chairman of WSW 2023

"Coimbatore is poised to play a crucial role in the development of the space sector," he enthasized. The primary objective of the World Space Week program is to showcase ISRO's ongoing space initiatives and the potential benefits they offer for humanity's well-being. He attributed the success of the program to the dedicated teamwork involved.

Subbananthan mentioned that numerous events have been scheduled for the week, with a strong focus on educating students. He expressed hope that some of these students might choose to pursue careers at ISRO in the future, considering it a significant achievement for their efforts. He also provided insights into India's progress in the field of space and technology.



### Importance of Perseverance

**- Prof. Bharathi Harishankar,** Vice Chancellor of Avinashilingam Institute for Home Science & Higher Education for Women

"With passion and dedication, one can achieve great heights in any field," she believes. She places her trust in the younger generations, who have more time and skills at their disposal. She emphasized the importance of perseverance, not only as a path to success but also as a tool for learning from past failures. Furthermore, she highlights the self-reliant nature of ISRO, where everything is developed in-house.




### Math Education Concerns

**- Lovelina Little Flower,** Member, VC Committee & Syndicate Member, Professor & Head Department of Social Work, Bharathiar University

She emphasized the dual nature of life where winners and losers exist, often with comments from the audience lacking active participation. She expressed concern over the declining interest in mathematics courses and the possibility of closing the program. Lovelina urged teachers to make science and math classes engaging to ignite students' curiosity and interest in these vital subjects.

Continued on page 8...





## Surging Startup Ecosystem in Space Technology

**- C. A. Vasuki,** Secretary, and Director of KASC

She sighted the connection between Indian Vedic knowledge and astrology with astronomy and praised the wisdom contained in Indian scriptures, particularly the "Surya Siddhanta," a renowned book of astronomy. She applauded the remarkable achievements of the Indian Space Research Organisation (ISRO), acknowledging their invaluable contributions to space exploration.

She encouraged both arts and science students to consider contributing to ISRO, underlining the organization's inclusivity.

Highlighting the importance of hard work and dedication, she reminded the audience that Coimbatore, like ISRO, was built on relentless effort and commitment.

In her closing remarks, Vasuki left the audience with a resounding message, "We have the opportunities to be innovators, explorers, and entrepreneurs. Let's seize them with enthusiasm and dedication. Together, we can contribute to the progress of our nation and the advancement of space science."

"We have the opportunities to be innovators, explorers, and entrepreneurs. Let's seize them with enthusiasm and dedication".









# நாள்பட்ட மூட்டு, தசை, எலும்பு வலியா...?

# கே.ஜி மருத்துவமனைக்கு வாங்க...!

**- டாக்டர் கே.ஜி.பக்தவத்சலம், தலைவர், கே.ஜி. மருத்துவமனை**

✍ ப.சுகன்யா, தி கோவை மெயில்

நமது உடல் வலிமையாகவும் ஆரோக்கியமாகவும் இருந்தால்தான் நம் உள்ளம் நிம்மதியாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்கும். உடல் வலிமை என்றால் தசைகளும், எலும்புகளும் வலுவாக இருப்பது. மனிதனின் உடலில் 206 எலும்புகள் உள்ளன. எலும்புகளுடன் இணைக்கப்பட்ட தசை நார்கள் சுமார் 700 உள்ளன. இரண்டு எலும்புகள் இணையும் இடத்தை மூட்டு (ஆர்டிகுலேஷன்) என்கிறோம். உடலின் இயக்கத்திற்கு மூட்டுகள் உறுதுணையாக இருக்கின்றன. அப்படியான எலும்புகளை வலுவாகப் பாதுகாக்க வேண்டியது கட்டாயம் தானே?

அந்தவகையில், எலும்பியல் மறுவாழ்வு என்றால் என்ன? (ஆர்த்தோபெடிக் அண்ட் ரெஹபிலிடேஷன்) பிசியோதெரபியின் முக்கியத்துவங்கள் குறித்த கேள்விகளுக்கு கே.ஜி. மருத்துவமனையின் தலைவர் டாக்டர் ஜி.பக்தவத்சலம் அளித்த பதில்:

நடந்தால் கால் தசைகளுக்கு பலம், ஓடினால் இருதயத்திற்கு பலம், நன்றாக மூச்சு இழுத்து விட்டால் நுரையீரலுக்கு பலம். நடைப் பழக்கம் அதிகரிக்கையில் உடலில் ரத்த ஓட்டம் அதிகரிக்கும். எலும்புகளில் வலுகூடும். தசைகளின் வலிமையை மேம்படுத்த சத்தான உணவுகளை உட்கொள்வது அவசியம். இவை அனைத்துக்கும் முதன்மையாக வரும் முன் காப்பதுபோல் தினசரி உடற்பயிற்சி செய்வது மிகவும் அவசியம். அதிலும், எலும்புகள் வலுவடையும் வகையில் செய்யக்கூடிய உடற்பயிற்சிகளை செய்து வரவேண்டும்.


இன்றைய நவீன யுகத்தில் வாழ்வியல் முறை மாற்றத்தால் நம்மில் பலருக்கு உடல் எடை அதிகரிக்கிறது. சராசரியாக 75 கிலோவுக்கு அதிகமாக எடை இருந்தால் முழங்கால்களில் பாதிப்பு ஏற்படக்கூடும். இரண்டு முழங்கால்களிலும் பாதிப்பு ஏற்பட வாய்ப்புகள் அதிகம். இதை, ஆரம்ப நிலையிலேயே கட்டுக்குள் கொண்டுவர வேண்டும். இல்லையெனில், அறுவை சிகிச்சை செய்யவேண்டி வரலாம் என்பதால் உடல் பருமனை கட்டுக்குள் வைத்திருக்க வேண்டும். சொல்லப்போனால், உடல் எடையை குறைப்பது மிகவும் சவாலான விஷயம்தான். தினசரி நடைபயிற்சி, உடற்பயிற்சிகளை செய்து வருவதன் மூலம் தவிர்த்துவிடலாம் என்றார்.

**இண்டோ-இந்தியன் வார் இது!**

இந்தியாவில் குறைந்தது ஆறிலிருந்து ஏழு லட்சம் பேர் சாலை விபத்துகளில் சிக்கி மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படுகின்றனர். இதில், சுமார் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் பேர் உயிரிழக்கின்றனர். இந்திய சீனப்-போர், கார்கில்-போர், இந்திய-பாகிஸ்தான் போர்களில் உயிரிழந்தவர்களைவிட சாலை விபத்தில் உயிரிழக்கும் இந்தியர்கள் அதிகம். அதிலும், குறைந்த வயதினர்களே பெரும்பாலும் விபத்தில் சிக்கி உயிரிழக்கின்றனர். அதனால், அதிவேகம் உயிருக்கு ஆபத்து என்பதை கருத்தில் கொள்ளுங்கள்.


சிறந்த மருத்துவமனை என்பது அனைத்து வசதிகளையும் உள்ளடக்கியதாகும். அதாவது, 24/7 ஆப்ரேஷன் தியேட்டர், 24/7 ரத்த வங்கி, பொது அறுவை சிகிச்சை நிபுணர், எலும்பியல் அறுவை சிகிச்சை நிபுணர், பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை நிபுணர், இரைப்பை அறுவை சிகிச்சை நிபுணர், நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணர் போன்ற அனைத்து வகையான அறுவை சிகிச்சை நிபுணர்கள் இருக்க வேண்டும். மேலும், விபத்தில் அடிப்பட்டவர்களுக்கு ட்ருமா (புறத்தாக்கம்) அறுவை சிகிச்சை நிபுணர்களின் தேவை அவசியம். அப்படியாக, கோவையில் சிறந்த ட்ருமா மையமாக கே.ஜி மருத்துவமனை திகழ்கிறது. இங்கு, எலும்பியல் அறுவை சிகிச்சையில் நன்கு அனுபவம் நிறைந்த திறன்கொண்ட மருத்துவர்கள் இருக்கிறார்கள். விபத்து மேலாண்மையில் கே.ஜி மருத்துவமனையின் ஆர்த்தோபெடிக்ஸ் துறை மருத்துவர்கள் சிறந்து விளங்குகின்றனர் என்று சொன்னால் மிகையாகாது.




> அலுவலகத்தில் அமர்ந்து வேலை செய்யும் சூழலில் இருப்பவர்கள் 60 நிமிடங்களுக்கு ஒரு முறை எழுந்து நடப்பதை வழக்கமாக்குங்கள்.

## மூட்டின் உட்புறத்தை ஒரு திரையில் காட்சிப்படுத்தும்





ஆர்த்தோபெடிக்ஸ் என்பது எலும்பு முறிவு அறுவை சிகிச்சை. ஆர்த்ரோஸ்கோபிக் என்பது மூட்டுகளின் உட்புறத்தில் கேமராவை கொண்டு பயன்படுத்தும் ஒரு அறுவை சிகிச்சை முறை என்கிறார் மருத்துவர் ஸ்ருஜன் வட்ராணபு.

அதாவது, காயமடைந்த திசுக்களைக் கண்டறிந்து, அதனை சரிசெய்வதற்காக சிறப்பு உபகரணங்களைப் பயன்படுத்தி மூட்டுக்குள் செய்யப்படும் அறுவை சிகிச்சை. இந்த செயல்முறையானது சிறிய கீறல்கள் மூலம் செய்யப்படுவதால் குறைந்தபட்ச அசௌகரியத்தை ஏற்படுத்துகிறது. இதுஒரு விரைவான சிகிச்சைமுறை ஆகும்.

இந்த அறுவை சிகிச்சியானது பெரும்பாலும் முழங்கால், தோள்பட்டை, முழங்கை, கணுக்கால், இடுப்பு அல்லது மணிக்கட்டில் செய்யப்படும். அத்துடன் விளையாட்டு காயங்கள் மற்றும் விபத்துக்களால் ஏற்படும் எலும்பு காயங்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக ஆர்த்தோ மருத்துவர்களால் செய்யப்படும் ஒரு பொதுவான செயல்முறையாகும்.

ஆர்த்ரோஸ்கோபிக் அறுவை சிகிச்சையில் ஒரு சட்டை பொத்தான் ஓட்டை (ஹோல்) அளவிலான கீறல் செய்து அதன் மூலம் பென்சில் மெல்லிய அளவில் ஆர்த்ரோஸ்கோப்பை பொருத்துவது. அதாவது, ஆர்த்ரோஸ்கோப் ஒரு கேமரா லென்ஸ் மற்றும் ஒரு ஒளியைக் கொண்டிருக்கும். இது அறுவை சிகிச்சை நிபுணருக்கு மூட்டின் உட்புறத்தை ஒரு திரையில் காட்சிப்படுத்த உதவுகிறது. பிரச்னை கண்டறியப்பட்டதும், தேவைப்பட்டால் அறுவை சிகிச்சை மூலம் சரி செய்யப்பட்டு, சிகிச்சை முடிந்ததும் கருவிகள் அகற்றப்படும்.

பெரும்பாலும் மூட்டு காயங்கள் மற்றும் மூட்டுகளில் வீக்கம் போன்ற நோய்களுக்கு சிகிச்சையளிக்க ஆர்த்ரோஸ்கோபிக் அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது. முழங்கால் ஆர்த்ரோஸ்கோபிக் அறுவை சிகிச்சை மிகவும் பரவலாக செய்யப்படும் சிகிச்சை செயல்முறையாகும். ஆர்த்தோபெடிக்ஸ் மருத்துவர்கள் ஒருவரின் வயதின் அடிப்படையைக் கொண்டு அவர்களுக்கு எந்தமாதிரியான பிரச்னைகள் இருக்கும் என தீர்மானித்து சிகிச்சை அளிப்பார்கள். அதாவது, 20-40 மற்றும் 40-60 வயதிற்குள் இருப்பவர்கள் மற்றும் 60 வயதிற்கு மேல் உள்ளவர்கள்.

பொதுவாக 20 வயதிற்குள் இருப்பவர்களுக்கு முழங்கால் வீக்கம், முழங்கால் ஜவ்வில் பிரச்னைகள் ஏற்படலாம். 40 வயதிற்கு மேல் குருத்தெலும்பு குறைபாடுகள், செப்டிக் ஆர்த்ரிடிஸ் வரலாம். மேலும், வயது மூப்பின் காரணமாக 60 வயதிற்கு மேல் மூட்டு தேய்மானத்தினால் ஏற்படும் பிரச்னை. இதற்கு ஆர்த்ரோஸ்கோபிக் சிகிச்சை சிறந்த தீர்வு.

திறந்த அறுவை சிகிச்சையுடன் ஒப்பிடும்போது வலி மற்றும் விறைப்புத்தன்மை ஆர்த்ரோஸ்கோபிக் சிகிச்சையில் குறைவாக இருக்கும். இந்த அறுவை சிகிச்சைக்குப் பிறகு சில நாட்களுக்குள் நீங்கள் அன்றாட வேலைக்குத் திரும்பலாம்.

**'தேவையற்ற பயத்தை விடுங்கள்'**

பொறுத்துக் கொள்ள முடியாத முழங்கால் உள்ளிட்ட வலிகளுக்கு ஸ்டீராய்டு ஊசி போடுவது வழக்கம். இந்த ஸ்டீராய்டு ஊசி எடுத்துக் கொண்டால் பக்க விளைவுகள் அதிகப்படியாக ஏற்படக்கூடும். உடலில் நோய் எதிர்ப்பு சக்தி குறைப்படும் என்ற கருத்து மக்களிடம் பரவலாக உள்ளது. கோவிட் 19 தொற்றுக்குப் பிறகுதான் இந்த கருத்து பரவலாக எழுந்துள்ளது. ஆனால், இது முற்றிலும் தவறு ஸ்டீராய்டு ஊசியை போட்டுக் கொள்ளலாம் என அறிவுறுத்துகிறார்.

## நடக்கும் நேரம் குறைந்து விட்டது!





இன்றைய நவீனகால தொழில்நுட்பத்தில், முதுகு மற்றும் கழுத்து வலிக்கான குறிப்பிட்டு சொல்லும் அளவிற்கு ஒரு காரணம் மட்டும் இல்லை என்கிறார் மருத்துவர் நளந்தா. ஆனால், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பல்வேறு காரணங்களால் முதுகு மற்றும் கழுத்து வலிகள் வருகின்றன என விவரிக்கிறார்.,

பெரும்பாலும், முதுகெலும்புக்கு ஆதரவளிக்கும் தசைகள், தசைநார்கள் மேலும் வயது மூப்பின் விளைவுகளால் ஏற்படும் அழுத்தங்களினால் முதுகெலும்புகளின் சிதைவு ஏற்படலாம். உடல் பருமனாக இருக்குமேயானால் உங்கள் முதுகுத்தண்டில் அதிக எடையையும், உங்கள் வட்டுகளில் அழுத்தத்தையும் ஏற்படுத்தி முதுகுவலியை உண்டாக்கும். முதுகுவலியை ஏற்படுத்தக்கூடிய பெரும்பாலான கோளாறுகள் கழுத்து வலியையும் ஏற்படுத்தும். இந்த வலிகள் தசைக்கூட்டு அமைப்பில் உள்ள பிரச்னைகளால் விளைகிறது.

இதுமட்டுமல்லாமல், ஐ.டி. துறையில் பணிபுரியும் பலர் முதுகு மற்றும் கழுத்து வலியால் அவதிக்குள்ளாகின்றார்கள். குறைந்தது பத்திலிருந்து பன்னிரண்டு மணிநேரம் உட்கார்ந்து பணிபுரிகின்றனர். அவர்கள் எழுந்து நடக்கும் நேரம் குறைவு என்பதால் தசைகள் இறுக்கம் பெற்று வலிகளை உண்டாக்குகிறது. இது நாளடைவில் அதிகரித்து எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தும் என்பதால் வலிகளின் தன்மைகளை கண்டறிய ஆர்த்தோ மருத்துவ சிகிச்சை நிபுணர்களின் ஆலோசனைகளை பெற வேண்டியது அவசியம்.

மேலும், சி.டி ஸ்கேன், முதுகெலும்பில் எடுக்கும் எம்.ஆர்.ஐ. ஸ்கேன் மூலம் நோயின் தீவிரத்தை கண்டறிந்து அதற்கான சிகிச்சைகளை எடுத்துக் கொள்ள வேண்டும். செல்போன், வீடியோ கேம்ஸில் அதிக நேரம் செலவிடும் குழந்தைகளும் கழுத்து வலியால் பாதிக்கப்படுகின்றனர். அவர்களுக்காக, குழந்தைகள் நல எலும்பியல் மருத்துவர்கள் உள்ளனர். மேலும், இருதய கோளாறுகள் இருப்பவர்கள் கழுத்து வலிகளை அலட்சியமாக கருத வேண்டாம். வரும்முன் காப்பதுபோல் அபாயத்தை தடுக்க உரிய நேரத்தில் மருத்துவரை அணுக வேண்டியது கட்டாயம் என்கிறார்.

## நீண்ட நாள்பட்ட வலிகள் நிமிடத்தில் மறையும்

கே.ஜி. மருத்துவமனையில் 'கிரானிக்கல் பெயின் ஸ்பெஷலிஸ்ட்' டாக்டர் செந்தில்குமார் நீண்ட நாள்பட்ட வலிகள் குறித்து கூறியதாவது:

'வலிகளில் பல வகை உண்டு. எலும்பு, நரம்பு, தசைப் பிடிப்பு, மூட்டுகளில் வலி போன்றவை மூன்று மாதங்களில் இருந்து லேசாகத் தொடங்கி 10 வருடங்கள் வரை நிரந்தரமாக நோயாளியை விட்டுப் பிரியாமல் தொடர்ந்துகொண்டே இருக்கும். இதனால் மக்கள் பல்வேறு விதமான பிரச்னைக்கு ஆளாவார்கள். இதுவரை இந்த நீண்ட நாள் வலிகளுக்குத் தீர்வு இல்லாமலே இருந்தது. இந்நிலையில், கடந்த 10 முதல் 15 வருடங்களுக்குள் இதற்கான விழிப்புணர்வு மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளதுடன், நவீன சிகிச்சைகளும் வந்துள்ளன.


நாள்பட்ட மூட்டு, இடுப்பு வலியால் நடக்ககூட முடியாத நிலையில் மருத்துவமனைக்கு வீல் சேரில் வருபவர்கள் மற்றும் கால் முழங்கால், இடுப்பு மூட்டு மாற்று அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்களுக்கும் கூட வலி நிவாரண மருந்துகள் செலுத்தும் அதி நவீன கருவிகள் கொண்டு சிகிச்சை அளிக்கப்பட்ட பின் மிக இயல்பாக நடந்து வீட்டுக்கு செல்கிறார்கள்.

இதற்கான அதிநவீன மருத்துவ சிகிச்சை முறைகள், மருந்துகள் வலி நிவாரண சிகிச்சையில் தற்போது வந்துள்ளன. 50 முதல் 80 வயது உள்ளவர்கள் அறுவை சிகிச்சை செய்வதற்குத் தயங்குவார்கள். அப்படி இல்லை என்றால், அவர்களுக்குப் பல நோய்கள் உடலில் இருக்கும். அதனால் அவர்களுக்கு அனைத்துப் பரிசோதனைகளும் எடுக்கப்பட்டு சிகிச்சை அளிக்க வேண்டிய கட்டாயம் ஏற்படும்.

இதனால் ஏற்படும் வலி காரணமாக மக்கள் பலவித இன்னல்களுக்கு ஆளாவார்கள். ஒருவரது இயல்பான எண்ணங்களை மாற்றும், தூக்கத்தைக் கெடுக்கும், கோபம், மனச்சோர்வு போன்ற தொந்தரவுகள் ஏற்படும்.

நாள்பட்ட வலிக்கும் சாதாரண வலிக்கும் நிறைய வித்தியாசம் உண்டு. ஒருவருக்கு காலில் அடிபட்டால் சிகிச்சை எடுத்த பின்பு அந்த இடத்தில் வரக்கூடிய வலி சாதாரணமானது. கிரானிக்கல் பெயின் என்பது காயமோ அடியோ ஏற்படாமல் தொடர்ந்து உடலின் ஒரு பகுதியில் வலி இருந்துகொண்டே இருக்கும். இதைவிட மிகவும் மோசமானது, ***suicide tendency*** வலி ஆகும். இது, தொடர்ந்து ஏற்படும் வலியின் இன்னல்கள் காரணமாக ஒருவருக்குத் தற்கொலை செய்யும் எண்ணத்தைத் தூண்டும். அந்த அளவிற்கு இந்த வலி தொடர்ந்துகொண்டே இருக்கும்.

எனவே, இதுபோன்ற வலி உள்ளவர்களுக்கு எக்ஸ்ரே, ஸ்கேன் போன்றவற்றை எடுத்துப் பார்த்து, பின்னர் அவர்களுக்கு எந்தப் பகுதியில் வலி இருக்கிறதோ அந்தப் பகுதியில் ***PRP (Platelet-Rich Plasma)*** எனும் பரிசோதனை செய்யப்படும். இந்த பரிசோதனை மூலம், அவர்களுடைய ரத்தத்தை எடுத்து, சிவப்பு ரத்த அணுக்களை வெள்ளை இரத்த அணுக்கள் மற்றும் பிளேட்லெட்டுகளிலிருந்து பிரித்த பின்பு, அந்த பிளேட்லெட் மீண்டும் ஊசி மூலமாக வலியுள்ள இடத்தில் செலுத்தும்பொழுது அவர்களுக்குப் பூரண வலி நிவாரணம் ஏற்படுகிறது.





எப்படியெனில், ஊசி செலுத்தும்போது அவர்களுக்கு அந்தப் பகுதியில் புதிய செல்கள் உருவாகிறது. அதனால் அவர்கள் குணமடைகின்றனர். தோள்பட்டை மற்றும் முதுகுத் தண்டுவடத்தில் ஏற்படக்கூடிய வலிகளுக்கும் எளிமையான மருத்துவம் உள்ளது. எந்தப் பகுதியில் வலி இருக்கிறதோ அதே பகுதியில் ஊசி மூலமாக மருந்து செலுத்தி வலியைக் குணப்படுத்தலாம். அதனால் நீண்ட நாள் வலிகள் இருப்பவர்கள், நமக்கு நிரந்தரத் தீர்வு இல்லையே என வருந்தத் தேவையில்லை. உங்கள் எல்லா வலிகளுக்கும் தீர்வு கே.ஜி. மருத்துவமனையில் கிடைக்கிறது.

வலி நிவாரண சிகிச்சை என்பது உடல் உறுப்புகளில் ஏற்படும் நாள்பட்ட வலிகளுக்கு மட்டும் அல்ல. மிக சவாலான அறுவைசிகிச்சைக்குப் பிறகு நோயாளியின் மன பயத்தைப் போக்கி இயன்முறை மருத்துவம் செய்துகொள்ள உதவும் வகையில் வலி நிவாரண சிகிச்சையானது, தற்போதைய நவீன மருத்துவத்தில் ஒரு இணை உதவி மருத்துவமாகப் பயன்படுத்தப்படுகிறது.

"வலி இல்லாத வாழ்வு என்பது வரம்... அதைத் தருவதே கே.ஜி. மருத்துவ வலி நிவாரண மையத்தின் தரம்" என்ற நோக்கத்தைத் தாரக மந்திரமாகக் கொண்டு, கே.ஜி. மருத்துவ மையத்தின் தலைவர் பத்மஸ்ரீ **Dr. G.**பக்தவத்சலம் வழிகாட்டுதலோடு வலி நிவாரண மருத்துவ மைய சிறப்பு மருத்துவர் தலைமையிலான குழுவினர் மக்களுக்குத் தன்னலமற்ற சேவையை செய்து வருகிறார்கள்' என்றார்.







## உடல் இயக்கத்தில் எலும்பு மண்டலம் இன்றியமையாதது

வயதானால் தலைமுடி எப்படி நரைக்குமோ அதேபோல் வயதானால் மூட்டு தேய்மானமும் வரும். நம் அன்றாட உடல் இயக்கத்திற்கு எலும்பு மண்டலம் இன்றியமையாத ஒன்று என்கிறார் எழும்பியல் மருத்துவர் சக்திவேல்.

எலும்பியல் என்பது எலும்புகள், மூட்டுகள், தசைகள், தசைநார்கள், நரம்புகள், முதுகெலும்பு நெடுவரிசை மற்றும் முதுகெலும்பு நிரலை உள்ளடக்கியது. சில காரணங்களால் உங்கள் கை, கால்களில் ஏற்படும் கடுமையான வலி, உங்கள் அன்றாட நடவடிக்கைகளில் உடல் ரீதியிலான இடையூறுகள் சில, நாள்பட்ட பிரச்னையாக மாறக்கூடும்.

அதாவது, எலும்புகளின் மோசமான சீரமைப்பு, விபத்து போன்ற நிகழ்வுகள், பிறப்புக்கு முன் ஏற்படக்கூடிய வளர்ச்சி நிலைமைகள், முதுகெலும்பின் சில குறைபாடுகள், மூட்டுகளின் தேய்மானம், எலும்புகள் பலவீனமடையச் செய்யும் சில வளர்சிதை மாற்ற நிலைமைகள், முதுமை அதிகரிப்பதால் ஏற்படும் சீரழிவு நிலைகள், எலும்பு கட்டிகள், நரம்புகள் மற்றும் தசைகளை பாதிக்கும் சில எலும்பு கோளாறுகள் ஆகும். மேலும், எலும்பியல் அறுவை சிகிச்சை என்பது தசைக்கூட்டு அமைப்பு சம்பந்தப்பட்ட நிலைமைகளுடன் தொடர்புடைய அறுவை சிகிச்சையின் ஒரு பிரிவாகும்.

எலும்பியல் நிலைகளுடன் தொடர்புடைய சில பொதுவான அறிகுறிகள் என்று எடுத்துக் கொண்டால் மூட்டு வலி வீக்கம், மூட்டுகளின் விறைப்பு, மூட்டுகளில் சோர்வு அல்லது உணர்வின்மை, பாதிக்கப்பட்ட பகுதிகளின் சிதைவுகள் மற்றும் பாதிக்கப்பட்ட இடத்தில் வெப்பத்துடன் எரிச்சல் ஏற்படுவது.





**சரி, இதற்கான காரணங்கள்தான் என்ன?**

மூட்டுகளின் அதிகப்படியான பயன்பாடு, விபத்துக்கள் அல்லது காயங்களில் ஏற்படக்கூடிய கடுமையான அதிர்வு, பல ஆண்டுகளாக மூட்டுகளில் ஏற்படும் நாள்பட்ட அதிர்வு நிலைகள். முதுமை காரணமாக ஏற்படும் தேய்மானங்கள் ஆகும். பாதிக்கப்பட்ட பகுதி மற்றும் பிரச்னைகளுக்கு ஏற்ப எலும்பியல் நிலைகளின் சிகிச்சையானது மாறுபடும். எக்ஸ்ரே, எம்.ஆர்.ஐ. மற்றும் சி.டி. ஸ்கேன், எலும்பு ஸ்கேன், ஆர்த்ரோகிராபி மற்றும் டிஸ்கோகிராபி போன்ற இமேஜிங் சோதனைகள் நோயின் தீவிரத்தை கண்டறிய உதவும் வழிமுறைகள்.

முதுமை, உடல் பருமன், புகைபிடித்தல், முறையற்ற உடல் இயக்கவியல் மற்றும் நீரிழிவு போன்ற நாள்பட்ட நோய்கள், எலும்பியல் நிலைமைகளுடன் தொடர்புடைய சில ஆபத்து காரணிகளாகும். மேலும், எதிர்பாராமல் ஏற்படும் காயங்களுக்கு முதல் 24-48 மணி நேரத்திற்குள் ஐஸ் கட்டியை பயன்படுத்த வேண்டும். ஏனெனில், காயமடைந்த பகுதிக்கு ரத்த ஓட்டம் குறைவதால் வீக்கத்தைக் குறைக்க ஐஸ் கட்டி பயன்படுத்தப்படுகிறது. மேலும், வீக்கம் குறைந்த பிறகு வலியைப் போக்கவும் ஐஸ் கட்டியை பயன்படுத்தலாம்.

எலும்புகளை வலுப்படுத்த வலிமையான உடற்பயிற்சிகளை செய்வதும், உடல் எடையை பராமரிப்பதும் மற்றும் புகைபிடிப்பதை நிறுத்துதல் ஆகியவை எலும்புகள் மற்றும் மூட்டுகளை வலுப்படுத்த உதவும் என்கிறார்.

## உடற்தகுதிக்கு மிகவும் அவசியமானது...!

காயத்தில் இருந்து மீண்டு வர நீண்ட காலம் எடுக்கிறதா? ஏதேனும் ஒரு நோயின் பாதகமான விளைவுகளை நீங்கள் சகித்துக் கொண்டிருக்கிறீர்களா? இதற்கான சிறந்த தீர்வு பிசியோதெரபி என்கிறார் பிசியோதெரபி மருத்துவர் மோகன் காந்தி.

இது ஒரு நிலையான சிகிச்சைமுறை மற்றும் முழுமையான உடற்தகுதியை வழங்கும் சிகிச்சை நுட்பங்களின் சிறந்த கலவையாகும். இது காயம் அடைந்த, நாள்பட்ட நோயால் பாதிக்கப்பட்ட அல்லது அறுவை சிகிச்சைக்கு உட்பட்ட நபர்களின் உடல் செயல்பாடு மற்றும் இயக்கம் ஆகியவற்றை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட மருத்துவ நடைமுறை. பிசியோதெரபி சிகிச்சை ஒருவரின் செயல்பாட்டு திறன்களை திறம்பட மீட்டெடுக்க உதவும். மேலும் மருத்துவ ரீதியாக நிரூபிக்கப்பட்ட சிகிச்சையும்கூட.

"பிசியோதெரபி மற்றும் மறுவாழ்வு" ***(Physiotherapy and Rehabilitation)*** இந்த இரண்டும் ஒரு விரிவான மருத்துவத்தின் இன்றியமையாத கூறுகள். உடலில் புறத்தாக்கத்தை அனுபவித்த அல்லது நாள்பட்ட நிலைமைகளைக் கொண்ட நபர்களின் வாழ்க்கைத் தரத்தை பிசியோதெரபி சிகிச்சையால் மேம்படுத்த முடியும்.

பெரும்பாலான மக்கள் விரைவான நிவாரணத்திற்காக வலி மருந்துகளை நாடுகிறார்கள். ஆனால் இந்த மருந்துகள் குறுகிய கால நிவாரணத்தை வழங்குகின்றன, அதேசமயம் பிசியோதெரபி மற்றும் மறுவாழ்வு உங்கள் வலிக்கான மூல காரணத்தை தீர்க்க முடியும்.

மேலும், இது உங்கள் வேதனைகள் மற்றும் உடல் சமநிலையை மேம்படுத்த உதவும் என்றவர்; நடைப்பயற்சி செய்வதை முறையாக செய்ய வேண்டும் என்று அறிவுறுத்துகிறார்.

**'60 நிமிடங்களுக்கு ஒரு முறை நடங்கள்'**

வலி வந்து விடுமே என்ற பயத்தில் சிலர் நடப்பதை முற்றிலும் தவிர்ப்பார்கள். இது மிகவும் தவறானது. இது நோயின் வீரியத்தை இன்னும் அதிகப்படுத்தும். குறைந்தது ஒரு மணி நேரம் நடைப்பயற்சி செய்வது மிக முக்கியம். அலுவலகத்தில் அமர்ந்து வேலை செய்யும் சூழலில் இருப்பவர்கள் 60 நிமிடங்களுக்கு ஒரு முறை எழுந்து நடப்பதை வழக்கமாக்குங்கள். இதனை செய்து வரும்போது, உடல் சார்ந்த பிரச்னைகள், எலும்பு சார்ந்த பிரச்னைகள், தசை சார்ந்த பிரச்னைகள் குறைவதற்கு வாய்ப்புகள் அதிகம்.

காலையில் எழுந்ததும் ஒரு சிலருக்கு குதிங்கால் வாதம், அதாவது குதிங்காலில் வலி ஏற்படும். இதற்கு, சரியான காலணிகள் அணிந்தால் குதிங்காலில் ஏற்படும் வலியை தவிர்க்கலாம். மேலும், பிசியோதெரபி சிகிச்சை மற்றும் முறையான உடற்பயிற்சி எடுத்துக் கொண்டால் போதும்.

ஐ.டி. துறையில் பணிபுரிபவர்களுக்கு மட்டும்தான் கழுத்துவலி வரும் என்பதில்லை அதிக நேரம் டிவி, செல்போன் பார்ப்பவர்களுக்கும் கழுத்துவலி வருகிறது. குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் பாதிப்புக்குள்ளாகின்றனர். நமது அலுவலக வேலைக்கு ஏற்றமாதிரியான உடற்பயிற்சி செய்வது முக்கியம். எடுத்துக்காட்டாக, அதிக நேரம் அமர்ந்து வேலை செய்பவர்ள் கழுத்துக்கும், முதுகுக்குமான உடற்பயிற்சிகளை செய்ய வேண்டும். அதிக நேரம் நடப்பவர் என்றால் கால்களுக்கு வலு சேர்க்கும் வகையான உடற்பயிற்சி செய்ய வேண்டியது அவசியம். இவ்வாறு, வேலைக்கு ஏற்றார்போல் உடற்பயிற்சி செய்தாலே பல்வேறு பிரச்னைகளில் இருந்து நம்மை தற்காத்துக்க முடியும்.

இருக்கையில் முன்பக்கம் குனிந்து உட்காரும்போதும், பின்பக்கம் சாய்ந்து உட்காரும்போதும் இடுப்பு வட்டுக்களில் அதிக அழுத்தம் ஏற்படுவதால் முதுகு வலி ஏற்படுகிறது.

இதனை தவிர்க்க இருக்கையில் அமரும்போது நேராக உட்கார வேண்டும். மேலும், விளையாட்டின் போது ஏற்படக்கூடிய காயங்களால் இளைஞர்கள் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள். எனவே, விளையாட்டிற்கு முன்பு தங்களை தயார்நிலை (வார்ம் அப்) செய்துகொள்ள வேண்டும். அதேபோல், விளையாடி முடித்த பிறகு கூலிங் டவுன் செய்வதும் அவசியம் என்கிறார்.





## வேண்டுவோருக்கு வேண்டுவன அருளும்

# ஸ்ரீ காரண கரிவரதராஜ பெருமாள்

✍ தி கோவை மெயில்

கோயம்புத்தூர் மாவட்டம் சின்னியம்பாளையம் அருகே வெங்கிட்டாபுரம் என்ற இடத்தில் ஸ்ரீ காரண கரிவரதராஜ பெருமாள் திருக்கோவில் உள்ளது.

காரை வனத்தில் சுயம்புவாக தோன்றிய பெருமாள் என்பதால் "ஸ்ரீ காரண கரிவரதராஜ பெருமாள்" என அழைக்கப்படுகிறார். இத்திருத்தலம் 350 ஆண்டுகள் பழமை வாய்ந்தது. இவரை காரண பெருமாள் என்றும் பக்தர்கள் அழைக்கின்றனர்.

மேலும், கருவறைக்கு நேர் பின்புறமாக, பூர்வ மூலவர் என்ற திருநாமத்தில் இரு காரை மரங்களுக்கிடையே பெருமாள் சுயம்பு வடிவில் காட்சியளிக்கிறார். உபய நாச்சிமார்களோடு ஸ்ரீ காரணராஜர் உற்சவராக அருள்பாலிக்கிறார். இங்கு மூலவர் மற்றும் உற்சவர் என இருவருக்கும் தனித்தனி பெரிய திருவடிகள் (கருடாழ்வார்) இருப்பது இக்கோவிலின் சிறப்பம்சம்.

**கோவில் அமைப்பு:**

அர்த்த மண்டபத்தில் குறள் காவலப்பர் என்ற சின்ன பெருமாள் மற்றும் திருமங்கையாழ்வார் உள்ளனர். உட்பிரகார சன்னதி ஒன்றின் முன்புறம் சக்கரத்தாழ்வார், பின்புறம் யோக நரசிம்மர் அமைந்துள்ளனர். மேலும், உடல் பிணியைப் போக்கி ஆரோக்கியத்தை மேம்படுத்தும் தன்வந்திரி பகவான் சன்னதி இங்கு அமைந்திருப்பது சிறப்பு. அதுமட்டுமின்றி, ஆஞ்சநேயர் சன்னதியும் உள்ளது.

திருக்கோவில் பின்புறத்தில் நான்கு ஏக்கர் பரப்பளவில் மூலிகை வனம் அமைந்துள்ளது. செஞ்சந்தனம், கதம்பம், ஈட்டி, தேக்கு, காட்டுக்கொன்றை என பலவகையான மூலிகை மரங்கள் உள்ளன. இவ்விடத்தில், சித்திரை மாதத்தில் ராமானுஜர் அவதரித்த திருவாதிரை நட்சத்திர நாளில் பெருமாள் எழுந்தருளி பக்தர்களுக்கு காட்சியளிப்பார்.

> **குழந்தை பாக்கியம் வேண்டும் தம்பதிகள் திருவோண நாளில் தங்கத்தாமரை அர்ச்சனை செய்து வணங்கினால் விரைவில் குழந்தை பாக்கியம் கிடைக்கப் பெறலாம்**

**7 மணி நேரம் நடக்கும் திருமஞ்சனம்:**

மாதந்தோறும் வரும் திருவோண நாளில் நடையழகுடன் பெருமாள் புறப்பாடு நடைபெறும். பெருமாளுக்கு உகந்த மாதம் புரட்டாசி என்பதால், சனிக்கிழமைகளில் காரண ராஜருக்கு உற்சவம் சிறப்பாக நடைபெறுவதோடு, நான்கு நாள் உற்சவமும் நடைபெறும்.

புரட்டாசி கடைசி வெள்ளிக்கிழமையில் காரண கரிவரதராஜருக்கு திருக்கல்யாண மஹோத்சவம் நடைபெறும். இதற்கடுத்து வரும் நாட்களில், கருட சேவை, திருமங்கையாழ்வாரின் வேடுபறி உற்சவம், பெரிய திருமஞ் சனம் நடைபெறும். திருமஞ் சனம் சுமார் 7 மணி நேரம் பிரமாண்டமாக நடக்கும்.

இங்கு எழுந்தருளியுள்ள பெருமாள், வேண்டுவோருக்கு வேண்டுவனவெல்லாம் அள்ளி வழங்கக் கூடியவர். திருமண தடைகளை நீக்கி கல்யாண பாக்கியத்தைக் கொடுத்து, நல்வாழ்வு அளித்து வந்துள்ளதால் "கல்யாண நாயகன்" என்ற திருநாமமும் பெருமாளுக்கு உண்டு.

**நிவர்த்தி வழிபாடுகள்:**

குழந்தை பாக்கியம் வேண்டும் தம்பதிகள் திருவோண நாளில் தங்கத்தாமரை அர்ச்சனை செய்து வணங்கினால் விரைவில் குழந்தை பாக்கியம் கிடைக்கப் பெறலாம் எனக் கூறப்படுகிறது. மேலும், எட்டு திருவோண நாளில் பெருமாளை தொடர்ந்து தரிசித்து வந்தால் வாழ்வில் இடர்பாடுகள் நீங்கி பக்தர்களின் பிரார்த்தனைகளை நிறைவேற்றுகிறார் காரண பெருமாள்.



"வேண்டுபவர் மனம் வழங்கும் பெருமாள், நம் வேங்கடபுர பெருமாள், கண்டவர்தம் மனம் விரும்பும் பெருமாள், நம் காரணராஜ பெருமாள்"

ஸ்ரீ ராமகிருஷ்ணா கலைக் கல்லூரியில்

## சர்வதேச கருத்தரங்கம்!

✍ தி கோவை மெயில்

ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் உயிரி தொழில்நுட்பவியல் துறையுடன், மலேசியா இன்டி சர்வதேசப் பல்கலைக்கழகம் (ஐ.என்.டி.ஐ.) இணைந்து, சர்வதேச அளவிலான இரண்டு நாள் கருத்தரங்கை புதன்கிழமை நடத்தியது.

உயிரி தொழில்நுட்பங்களின் அணுகுமுறையில் உணவு, விவசாயம், ஊட்டச்சத்து மற்றும் ஆரோக்கியம் சார் அறிவியலில் நீடித்த நிலையான உயிர்வளங்கள்" எனும் தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கில் கல்லூரி முதல்வர் மற்றும் செயலர் தலைமை வகித்தார். உயிரிதொழில்நுட்பத் துறைத் தலைவர் சுபாஷ்குமார் வரவேற்றார்.

இதில் மலேசியா இன்டி சர்வதேசப் பல்கலைக்கழக இணை துணைவேந்தர் வாங்லிங்சிங் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு ஆய்வு புத்தகத்தை வெளியிட்டார்.

மேலும், புதுதில்லி அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை இணை திட்ட அலுவலர் பிலால் அஹமது, மத்திய பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டு மைய வாழ்வு அறிவியல் விஞ்ஞானி கதிர்வேலு ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு உரையாற்றினர்.


இதையடுத்து, "நிலையான மேம்பாட்டில் உயிர்வளங்கள் மேலாண்மை", "கோவிட் 19 பின்னர் உலக மக்கள் தொகைப் பெருக்கம், டி.என்.ஏ. தொழில்நுட்பத்தில் விவசாயம், மருத்துவத் துறைகள் வளர்ச்சி நிலைகள்", "நுண்ணுயிரி தொழில்நுட்பவியல்", "ஆரோக்கியம் சார் அறிவியல்" உள்ளிட்ட தலைப்புகளில் அமர்வுகள் நடைபெற்றன.

இதில் பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மாணவர்கள், ஆய்வாளர்கள் மற்றும் பேராசிரியர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.



ஆய்வு புத்தகத்தை வெளியிட்ட மலேசியா இன்டி சர்வதேசப் பல்கலைக்கழக இணை துணைவேந்தர் வாங்லிங்சிங். அருகில் பேராசிரியர் கீதா சுப்பிரமணியம், கல்லூரி முதல்வர் மற்றும் செயலர் சிவக்குமார், விஞ்ஞானி கதிர்வேலு, உயிரிதொழில்நுட்பத் துறைத்தலைவர் சுபாஷ்குமார் உள்ளிட்டோர்.

## கே.எம்.சி.ஹெச். மருத்துவமனையில் மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு



மார்பக புற்று நோய் விழிப்புணர்வு மாதத்தை முன்னிட்டு, கோவை கே.எம்.சி.ஹெச். மருத்துவமனையின் நுழைவாயில் முன்பு பிங்க் வண்ணக் குடைகளை கொண்டு அலங்கரிக்கப்பட்டு பொதுமக்களுக்கு மார்பக புற்றுநோய் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இதனால் மருத்துவமனைக்கு வரும் பொதுமக்கள் பலர் குடை அலங்காரத்தைக் கண்டு மார்பக புற்றுநோய் குறித்து கேட்டறிந்து விழிப்புணர்வு பெற்றனர்.

## என்.ஜி.பி கல்லூரியில் பிராண்ட் எக்ஸ்போ!


✍ தி கோவை மெயில்

என்.ஜி.பி. கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் மேலாண்மைத் துறை சார்பில் 'பிராண்ட் எக்ஸ்போ' அறிமுக விழா நடைபெற்றது.

கல்லூரி கலையரங்கில் நடைபெற்ற விழாவினை கல்லூரியின் தாளாளர் டாக்டர் தவமணி பழனிசாமி தொடங்கி வைத்தார்.

கல்லூரியின் இணை முதல்வர் சரவணன், என்.ஜி.பி. கல்விக்குழுமங்களின் கல்விசார் இயக்குநர் முத்துசாமி ஆகியோர் தலைமை வகித்தனர். மேலாண்மைத்துறையின் தலைவர் முனைவர் மோகன் விருந்தினர்களை வரவேற்று பேசினார்.

விழாவில் மேலாண்மைத்துறை மாணவர்கள் புதியதாக சந்தைப்படுத்தப்பட்ட பல்வேறு பொருள்களின் தன்மைகள் குறித்து விவரித்தனர். மேலும், பிற துறைகளை சார்ந்த மாணவர்கள் மற்றும் பேராசிரியர்கள் உள்பட 4,000க்கும் மேற்பட்டவர்கள் புதிய பொருட்களை பற்றி அறிந்து பயன் பெற்றனர்.




என்.ஜி.பி. கல்லூரி தாளாளர் டாக்டர் தவமணி பழனிசாமி விழாவைத் தொடங்கி வைக்கிறார். உடன் கல்லூரியின் இணை முதல்வர் சரவணன், கல்விசார் இயக்குநர் முத்துசாமி ஆகியோர்.

# ஆன்மீகத்தில் ஆண் & பெண் வேறுபாடு உள்ளதா?

✍ தி கோவை மெயில்

வேத காலத்திலேயே ஆன்மீகத்தின் உயரிய எல்லைகளைக் கண்ட பெண்கள் நிறையப் பேர் வாழ்ந்திருக்கிறார்கள். வழிபாட்டின் தொடக்கமே, தாய் வழிபாடாகத்தான் இருந்திருக்கிறது. இன்றும் கூட ஆண் கடவுளர்களை விடவும், பெண் தெய்வ வழிபாடுதான் மிகுந்த செல்வாக்கோடு திகழ்கிறது.

சத்குரு: இல்லறத்தில் இருப்பவர்கள் தங்கள் முழுமையான ஆற்றலை வெளிப்படுத்தி வாழ்வதென்றால் அதற்கு ஒரு அடிப்படை தேவை இருக்கிறது. ஆண்கள், தங்கள் தன்மைக்கு எவ்விதத்திலும் பெண்கள் குறைந்தவர்கள் அல்ல என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். உடல் வலிமையில் வேண்டுமானால் ஆண்கள் விஞ்சியிருக்கலாம். உள்நிலையில் எந்த மாறுதலும் இல்லை. பெண்களை மதிக்கத் தெரியாத எந்த ஆணும், தன்னைத்தானே உணர்ந்துகொள்ள வாய்ப்பில்லை.

இந்திய ஆன்மீக உலகில் தன்னை உணரும் வாய்ப்பு ஆண்கள், பெண்கள் இருவருக்கும் சமம் என்பதற்கு நிறைய ஆதாரங்கள் உள்ளன. உள்நிலையில் ஆண், பெண் என்கிற பேதங்கள் ஏதுமில்லை. உயிரின் தன்மை ஒன்றுதான். ஆண் என்ற சொல்லும், பெண் என்ற சொல்லும் உடலைத்தான் குறிக்குமே தவிர உயிரின் இயல்பைக் குறிக்காது.

வேத காலத்திலேயே ஆன்மீகத்தின் உயரிய எல்லைகளைக் கண்ட பெண்கள் நிறையப் பேர் வாழ்ந்திருக்கிறார்கள். வழிபாட்டின் தொடக்கமே, தாய் வழிபாடாகத்தான் இருந்திருக்கிறது. இன்றும் கூட ஆண் கடவுளர்களை விடவும், பெண் தெய்வ வழிபாடுதான் மிகுந்த செல்வாக்கோடு திகழ்கிறது.

ஜனக மகாராஜாவின் அரசவையில் ஞானிகளின் மாநாடு ஒன்று நடைபெற்றது. விவாதங்கள் தொடங்கின. போகப்போக மிக நுட்பமான விஷயங்கள் குறித்து விவாதங்கள் முன்னேறின. பலரும் விவாதத்திற்கு ஈடுகொடுக்க இயலாமல் திணறி விலகினர். மீதம் இருந்தவர்கள் இரண்டே பேர். ஒருவர் யாக்ஞவல்கியர், இன்னொருவர் மைத்ரேயி என்கிற பெண்.


மற்ற அறிஞர்களாலும், முனிவர்களாலும் புரிந்துகொள்ள முடியாத அளவு ஆழமாகவும், மிக நுட்பமாகவும் இந்த இருவரும் தொடர்ந்து விவாதங்கள் நிகழ்த்தினர். ஒரு கட்டத்தில் யாக்ஞவல்கியர் தோல்வியைத் தழுவினார். மைத்ரேயியின் கால்களில் விழுந்து தன்னை சீடராக ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டினார். அவரது ஞானத்தின் மேன்மையினை உணர்ந்த மைத்ரேயி யாக்ஞவல்கியரை தனது கணவராக ஏற்றுக்கொண்டார். தான் விரும்புகிறவரை கணவராகத் தேர்வு செய்கிற உரிமை பெண்களுக்கு இருந்தது என்பது இதன் மூலம் விளங்கும்.

ஒருநாள் யாக்ஞவல்கியர் மைத்ரேயியிடம் வந்து, தான் வனங்களில் சென்று தவம் செய்யப் போவதாகவும், தன்னிடமிருக்கும் செல்வங்களையெல்லாம் மைத்ரேயியிடம் தந்துவிட்டு செல்ல விரும்புவதாகவும் கூறினார். அதற்கு மைத்ரேயி, "ஞானப்புதையலை நோக்கி அவர் செல்லும்போது தான் மட்டும் அற்பமான பொருட்களை வைத்துக் கொண்டு வாழ விரும்பவில்லை" என்று கூறிவிட்டு துறவு மேற்கொள்வதாகக் கூறினார். உறவுநிலை, துறவு நிலை இரண்டிலுமே தேர்வு செய்கிற உரிமை பெண்களுக்கு இருந்தது என்பது இதன் மூலம் புலப்படுகிறது.

அப்படியானால், பெண்ணடிமை எப்போது தொடங்கியது என்பதை சிந்திக்க வேண்டும். ஒரு சமூகம் நல்ல நிலையில் பாதுகாப்பான சூழலில் இருக்கும் காலகட்டத்தில் ஒரு பெண் சுதந்திரத்தோடு வாழ்வாள். அன்னிய ஆதிக்கங்களின்போது பெண் போகப் பொருளாகக் கருதப்பட்டு அவள் ஆணின் பாதுகாப்பில் இருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. மற்றவர்களிடமிருந்து பெண்ணை பாதுகாக்கும் பொறுப்பை ஆண் மேற்கொள்ளும் போதுதான் விதிகள், சாத்திரங்கள், தர்ம முறைகள் ஆகியவை மாற்றி எழுதப்பட்டு, பெண் அடிமையாக்கப்படுகிறாள். மங்கோலியா, மத்திய சீனம் போன்ற இடங்களிலிருந்து படையெடுப்புகள் நிகழ்ந்தபோது இத்தகைய பெண்ணடிமைத் தனங்கள் தோன்றின.

இப்போது ஆன்மீகத் தேடல் உள்ள ஆண்களையே எடுத்துக் கொள்ளுங்கள். 10, 15 வருடங்கள் குடும்பம் நடத்திவிட்டு திடீரென்று சந்நியாசம் வாங்கிக் கொண்டு போகிற உரிமையும் ஆணுக்கு இருக்கிறது. ஆனால் அப்படி அவன் போகிறபோது அவன் மனைவியையும், குழந்தையையும் யார் பார்த்துக் கொள்வார்கள்? இதுபோன்ற கேள்விகளுக்கு இன்றுவரை பதிலில்லை. ஆனால் அந்த நாட்களில், தன் வளர்ச்சிக்கு குடும்பம் ஒரு தடை என்று பெண்ணுக்குத் தோன்றினால் அதனை உதறிவிட்டுப் போகிற உரிமை தரப்பட்டிருக்கிறது.

பெண்மைக்குரிய சுதந்திரத்தையும், சமத்துவத்தையும் பறிக்கத் தொடங்கிய பிறகு குடும்பங்களிலிருந்த மகிழ்ச்சி பறிபோய் விட்டது. எப்போது ஒரு குடும்பத்தில் சமஅளவு சுதந்திரத்தோடு, இரண்டு உயிர்கள் இணைந்து வாழுகின்றனவோ, அங்கேதான் அன்பும், அமைதியும், ஆனந்தமும் இருக்கும். ஒருவர் சுதந்திரமாகவும், இன்னொருவர் அடிமையாகவும் இருக்கிறபோது குடும்பத்தில் பதட்டமும், பரபரப்பும், அவநம்பிக்கையும் நிலவுகிறது. பெண்மையின் ஆற்றலை எந்த விதத்திலும் குறைத்து மதிப்பிடாத ஆண்கள்தான் இல்லற வாழ்க்கையிலும், தன்னைத்தானே உணர்ந்து கொள்கிற தேடலிலும் வெற்றி பெற இயலும்.



# நெருப்பு வளையத்திற்குள் அண்ணாமலை!



**பாஜகவின் தேசியத் தலைவர்களுக்குத் தமிழ்நாட்டில் நடந்த பல விஷயங்கள் விரிவாகத் தெரியவில்லை. இப்போது அதிமுக முறிவைப் பலர் அதிர்ச்சியோடுதான் பார்க்கிறார்கள். தமிழ்நாட்டில் உள்ள ஏனைய பாஜக தலைவர்களிடம் இதுகுறித்துப் பேசுகிறார்கள். அதிமுகவுடனான மோசமான அணுகுமுறை நீங்கலாக, பாஜகவுக்குள்ளேயே மூத்த தலைவர்களிடம் அண்ணாமலை மோசமாகத்தான் நடந்துகொள்கிறார் எனும் விஷயத்தை இப்போது அவர்கள் விலாவரியாக எடுத்துச் சொல்கிறார்கள்.**





✍ சாணக்கியன், தி கோவை மெயில்

தமிழக அரசியலில் மட்டுமன்றி தேசிய அரசியலிலும் பேசுபொருளாக மாறியிருக்கிறார் தமிழக பாஜக தலைவர் கே.அண்ணாமலை.

டெல்லியில் இப்போது தமிழக பாஜக தலைவர் அண்ணாமலையைப் பற்றிப் பேச ஆரம்பித்திருக்கிறார்கள். பாஜகவுடனான கூட்டணியை முறித்துக்கொண்டது தமிழ்நாட்டு அரசியலில் மட்டுமல்லாது, இந்திய அளவிலும் பேசுபொருளாக மாறியிருக்கிறார் அண்ணாமலை.

பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில், பாஜகவுக்கு அடுத்து பெரிய கட்சி அதிமுகதான். பாஜகவோடு நீண்ட காலமாகக் கூட்டணியில் இருந்த சிவசேனை, அகாலிதளம், ஐக்கிய ஜனதா தளம் போன்ற கட்சிகள் இப்போது தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இல்லை. கூட்டணியில் உள்ளதாகச் சொல்லப்படும் மற்ற கட்சிகள் அனைத்தும் ஒன்றிரண்டு தொகுதிகளில் மட்டுமே போட்டியிடும் கட்சிகள் அல்லது தேர்தலில் போட்டியிடவே முடியாத கட்சிகள்தான்.

2014 மக்களவைத் தேர்தலில் 282 தொகுதிகளில் வென்ற பாஜக, 2019ல் 303 தொகுதிகளில் வென்றது. உத்தர பிரதேசம், மஹாராஷ்டிரம், குஜராத் போன்ற பாஜகவுக்கு வலுவான இடங்களைத் தாண்டி கர்நாடகம் (25), வங்கம் (18), தெலுங்கானாவில் (4) கிடைத்த எதிர்பாராத விளைச்சலுக்கும் இந்த வெற்றியில் முக்கியமான பங்கு உண்டு.

2024 தேர்தலில் 2014, 2019 போன்ற வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கை இன்று பாஜக தலைவர்கள் இடையிலேயே காணப்படவில்லை. இங்கே டெல்லியில் புலம்பல் சத்தம் கேட்க ஆரம்பித்து சில மாதங்கள் ஆகின்றன. ஏனென்றால், 2014, 2019 இரு தேர்தல்களிலும் கிட்டத்தட்ட 90%-100% தொகுதிகளை பாஜக வென்ற மத்திய பிரதேசம், ராஜஸ்தான், சத்தீஸ்கர், இமாச்சல் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் இப்போது காங்கிரஸின் பலம் கூடியிருக்கிறது.

அடுத்த மாதங்களில் நடக்கும் சட்டமன்றத் தேர்தல்களில் சத்தீஸ்கரில் காங்கிரஸ் ஆட்சியைத் தக்க வைக்கும் என்று பாஜக தலைமை அலுவலகத்திலேயே பேசிக்கொள்கிறார்கள்; ராஜஸ்தான், மத்திய பிரதேசத்தில் கடுமையான போட்டிச் சூழல் நிலவுகிறது. இங்கெல்லாம் அடுத்துவரும் மக்களவைத் தேர்தலில் எப்படியும் 100% வெற்றியை பாஜக எதிர்பார்க்க முடியாது என்பது வெளிப்படை.

எதிர்க்கட்சிகளின் வலுவான இந்தியா கூட்டணியால், உத்தர பிரதேசத்துக்கு அடுத்து அதிகமான தொகுதிகளைக் கொண்ட மஹாராஷ்டிரம் (48 தொகுதிகள்), பிஹார் (40 தொகுதிகள்) இரண்டிலும் பாஜகவுக்குப் பின்னடைவைச் சந்தித்திருக்கிறது. ஆகையினால், தேசிய அளவில் பாஜக கூட்டணியை வலுப்படுத்த வேண்டும் என்று கட்சிக்குள் தீவிரமான குரல்கள் ஒலிக்கின்றன.

இந்தச் சூழலில் பார்த்தால் அதிமுக வெளியேறியது பாஜகவுக்கு பெரிய அடி என்றுதான் சொல்ல வேண்டும். கூட்டணிக் கட்சிகள் கைகளை முறுக்குவது பாஜகவின் இயல்பு. அதிலும் அதிமுகவின் உள்கட்சி விவகாரங்களில் கடந்த 5 ஆண்டுகளில் நிறைய தலையிட்டது பாஜக. இந்தப் ‘பெரியண்ணன் மனோபாவம்’ தமிழக பாஜக தலைவர் அண்ணாமலையிடமும் உருவாகிவிட்டது. நாட்டையே ஆண்டாலும் தமிழ்நாட்டில் இன்னும் பாஜக சின்ன கட்சிதான். 2014 மக்களவைத் தேர்தலில் தமிழ்நாட்டில் அதிமுக தனித்து நின்றே 37 இடங்களை வென்றது; பாஜக ஒரு இடத்தை மட்டுமே வென்றிருந்தது; 2019 மக்களவைத் தேர்தலில் பாஜகவோடு கூட்டணி அமைத்து நின்ற அதிமுக ஒரு இடத்தை மட்டுமே வென்றது; பாஜகவால் அந்த ஒரு இடத்தையும் வெல்ல முடியவில்லை. பாஜகவுடன் கூட்டணி வைத்ததால் இவ்வளவு பெரிய தோல்வியைச் சந்திக்க வேண்டியிருந்தது என்று அப்போது அதிமுகவுக்குள் பேச்சு அடிபட்டது. இதில் நியாயமும் உண்டு. ஏனென்றால், மக்களவைத் தேர்தலோடு சேர்ந்து நடந்த சட்டமன்ற இடைத்தேர்தலில் பெரும்பான்மை இடங்களில் அதிமுக வென்றிருந்தது.

பாஜகவுடனான கூட்டணியை வேண்டாத சுமையாகத்தான் சுமந்தார்கள் அதிமுகவினர். அப்படியும் அவர்களைப் பற்றி வாய்க்கு வந்ததைப் பேசி கூட்டணிக்கு உலை வைத்தார் தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை. டெல்லியில் இந்த முறிவை பாஜக தலைவர்கள் யாரும் விரும்பவில்லை. அதனால்தான், அதிமுகவுடனான கூட்டணி முறிவு தொடர்பில் பாஜக தலைமை இதுவரை மௌனம் சாதித்துவருகிறது. அரசியலில் எப்போதுமே பேச வேண்டிய இடத்தில் காட்டப்படும் மௌனம் சொல்லும் செய்தி முக்கியமானது.

தமிழ்நாடு பாஜக தலைவர்கள் டெல்லி வந்தால் உள்துறை அமைச்சர் அமித்ஷா, பாஜக தேசிய அமைப்புப் பொதுச்செயலாளர் பி.எல்.சந்தோஷ் ஆகியோரைச் சந்திக்க முயற்சிப்பார்கள். கட்சியின் மாநிலத் தலைவர் என்பதால், இவர்கள் இருவரையும் சந்திப்பதோடு, பாஜக தேசியத் தலைவர் ஜெ.பி.நட்டாவையும் சந்திப்பார் அண்ணாமலை. அதுவும் சந்தோஷ் உடன் இணைந்துதான்; மிக அரிதாகவே பிரதமர் மோடியை அவரால் சந்திக்க முடியும். தமிழ்நாட்டில் பாஜகவை வளர்க்க சுதந்திரமாக முடிவெடுக்கும் அதிகாரத்தை விசேஷமாகக் கேட்டுப் பெற்றவர் அண்ணாமலை. அவருடைய நிலையே இதுதான் என்றால், அவருக்கு அடுத்த நிலைத் தலைவர்களைப் பற்றிக் கூறிட வேண்டியதில்லை. அதனால், பாஜகவின் தேசியத் தலைவர்களுக்குத் தமிழ்நாட்டில் நடந்த பல விஷயங்கள் விரிவாகத் தெரியவில்லை. இப்போது அதிமுக முறிவைப் பலர் அதிர்ச்சியோடுதான் பார்க்கிறார்கள். தமிழ்நாட்டில் உள்ள ஏனைய பாஜக தலைவர்களிடம் இதுகுறித்துப் பேசுகிறார்கள். அதிமுகவுடனான மோசமான அணுகுமுறை நீங்கலாக, பாஜகவுக்குள்ளேயே மூத்த தலைவர்களிடம் அண்ணாமலை மோசமாகத்தான் நடந்துகொள்கிறார் எனும் விஷயத்தை இப்போது அவர்கள் விலாவரியாக எடுத்துச் சொல்கிறார்கள்.

திடீரென்று கட்சிக்குள் வந்து தலைமைப் பதவியிலும் அமர்ந்துவிட்டதால், அண்ணாமலைக்கு பாஜகவின் செயல்முறை எதுவும் தெரியவில்லை என்பதைப் பலரும் தேசியத் தலைமையிடம் கூறியிருக்கின்றனர்.தமிழ்நாட்டின் பாஜகவுக்கென மாநிலத் தலைமை அலுவலகம் உள்ளது. முக்கியமாக இரண்டு அறக்கட்டளைகள் உள்ளன. கட்சிக்கென வார இதழ் உள்ளது. 50க்கும் அதிகமான பணியாளர்கள் உள்ளன. மாநில நிர்வாகிகள் என ஒரு குழு உள்ளது. தலைவர் யாராக இருந்தாலும், கட்சியின் அமைப்புப் பொதுச் செயலர் பதவியில் இருப்பவரை மீறி இந்தக் கட்டுமானத்திற்குள் எவரும் நுழைய முடியாது. ஏனென்றால், அந்தப் பதவியில் ஆர்.எஸ்.எஸ். பிரதிநிதியே அமர்த்தப்பட்டிருப்பார். பாஜக இந்தியா முழுவதுமே இந்தக் கட்டமைப்பில்தான் செயல்படுகிறது. தமிழ்நாட்டில் இப்போது மாநில அமைப்புப் பொதுச் செயலர் பதவியில் கேசவ விநாயகம் இருக்கிறார். ஆர்.எஸ்.எஸ். அமைப்பில் பல்லாண்டு காலம், பல்வேறு நிலைகளிலும் பணியாற்றி இந்த இடத்துக்கு வந்தவர் அவர். சென்னை, தியாகராய நகரில் உள்ள பாஜக மாநிலத் தலைமை அலுவலகம் முழுவதுமே கேசவ விநாயகத்தின் கட்டுக்குள்தான் உள்ளது. கூட்டுச் செயல்பாட்டின்படிதான் கட்சித் தலைவர் செயல்பட முடியும். இதை உடைக்க எவ்வளவோ முயன்றிருக்கிறார் அண்ணாமலை. முடியவில்லை.

தன்னுடைய கட்டுக்குள் கட்சித் தலைமையகத்தையோ, அமைப்பையோ கொண்டுவர முடியாது என்று உணர்ந்துகொண்ட அண்ணாமலை, தனக்கெனத் தனியாக இரண்டு இடங்களில் அலுவலகம் அமைத்திருக்கிறார் என்று சொல்லப்படுகிறது. அதேபோல, கட்சிக்கெனத் தகவல் தொழில்நுட்ப அணி இருக்கும்போது, தன் கட்டுப்பாட்டில் தனியாக அணியை உருவாக்கியிருக்கிறார். மாநிலப் பொதுச்செயலாளர்கள் உள்ளிட்ட மாநில நிர்வாகிகள் அணியைப் பயன்படுத்தாமல் தனக்கெனத் தனியாக ஒரு அணியை உருவாக்கிக்கொண்டு அவர்கள் வழியாகவே கட்சியை வழிநடத்துகிறார். அதாவது கட்சிக்குள் இருந்துகொண்டே தனக்கென்று ஒரு கட்சி நடத்துகிறார் என்கிறார்கள் டெல்லிக்கு வந்த தமிழ்நாட்டு பாஜக நிர்வாகிகள். இதுவரை தமிழ்நாட்டுக்குள் பாஜக உருவாக்க முடியாத சலனத்தை அண்ணாமலை உருவாக்குகிறார் என்று நம்பிய பாஜக தேசிய தலைமை இந்த விஷயங்கள் எதற்குமே தீவிரக் கவனம் கொடுக்கவில்லை. ஏனென்றால், அண்ணாமலை அப்படி ஒரு கதையாடலை டெல்லியில் உருவாக்கி வைத்திருந்தார். இங்கே டெல்லியில் உள்ள பாஜக தலைமை நம்பிய கதை இதுதான். “1952 முதல் பொதுத் தேர்தல் முதல் தமிழ்நாட்டிலும் பாஜக போட்டியிட்டுவருகிறது. ஆனால், 3% வாக்கு வங்கியை அதனால் தாண்ட முடியவில்லை. ஆனால், அதிமுக முதல் தேர்தலிலேயே பெரும் வெற்றிகளைக் குவித்தது. சமீபத்திய உதாரணம் என்றால்கூட, நாம் தமிழர் கட்சி மூன்றாவது தேர்தலிலேயே 7% வாக்கு வங்கியைத் தொட்டுவிட்டது. எனவே, தமிழ்நாட்டு மக்கள் ஒரு கட்சியை, ஒரு சித்தாந்தத்தை நம்புவதைவிட, தனியொரு மனிதருக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். பாஜகவுக்கும் அப்படி ஒரு தலைவர் வேண்டும். அந்தத் தலைவர் அண்ணாமலை.”

எல்லாவற்றுக்கும் தலையசைக்க டெல்லி தலைவர்கள் ஆரம்பித்தது இந்த வியூகத்தினால்தான். ஏனென்றால், அவர்களைப் பொறுத்தமட்டில் இங்கே இழப்பதற்குப் பெரிதாக ஒன்றும் இல்லை. அண்ணாமலையால் மக்களிடம் பாஜக குறித்த ஒரு பேச்சை உருவாக்க முடிந்தது. திமுகவினர் பழனிசாமியையும் அதிமுகவையும் விட்டுவிட்டு அண்ணாமலையையும் பாஜகவையும் திட்ட ஆரம்பித்தபோது, ‘தமிழ்நாட்டில் இன்றைக்கு திமுக எதிர் பாஜக அரசியல்தான் நடக்கிறது’ என்றே பேச ஆரம்பித்தார் அண்ணாமலை; பல ஊடகங்களும் அப்படிப் பேசின.

இதையெல்லாம் பாஜக தேசிய தலைமை ரசித்தது. ஆனால், உச்சத்தில் யாரும் எதிர்பாராத நிலைக்கு இப்போது கட்சியைக் கொண்டுபோய்விட்டார். அதிமுக கூட்டணி முழுமையாக முறிந்துவிட்டது என்று சொல்ல முடியாவிட்டாலும் பந்து இப்போது பாஜகவிடமிருந்து அதிமுக பக்கம் போய்விட்டது என்பதை முழுமையாக பாஜக தலைவர்கள் உணருகிறார்கள். அதிமுக பல நிர்ப்பந்தங்களிலிருந்து தப்பிவிட்டது; இனி கூட்டணி மீண்டும் அமைந்தாலும், அதிமுக வைத்ததுதான் சட்டம். தேசிய அளவில் அதிமுகவுடனான முறிவு பாஜகவுக்கு உண்டாக்கியிருக்கிற சிக்கலும் இருக்கிறது; பல கட்சிகளும் இதை வியப்போடு பார்க்கின்றன. பாஜக கூட்டணிக்கு இனி பாஜகவின் கை இறங்கும். இது பாஜகவுக்குச் சங்கடம். அண்ணாமலை பெரிய நெருப்பு வட்டத்துக்குள் சிக்கிக்கொண்டிருக்கிறார் என்பதே உண்மை. வெளியில் காட்டிலும் அவருடைய சொந்தக் கட்சியிலேயே பலர் அவருடைய வீழ்ச்சியை எதிர்பார்க்கிறார்கள் என்பது அதனினும் உண்மை!

அரசியல் தலைவர்கள் தங்களுடைய கட்சிக்குள் மனங்களை வெல்வதன் வழியாகத்தான் மக்கள் மனதை வெல்ல முடியும். அண்ணாமலை மேலிருந்து வந்ததன் விளைவைக் கீழிருந்து எதிர்கொள்கிறார். பாஜக நடத்திய பரிசோதனை முயற்சிகளில் ஒன்று அண்ணாமலை. அந்தப் பரிசோதனை முயற்சியின் விளைவு என்னவென்பது வரவிருக்கும் மக்களவைத் தேர்தலில் வெளிப்படலாம் என்று அது நினைத்திருந்தது; ஆனால், தேர்தலுக்கு முன்பே அது வெளிப்பட ஆரம்பிக்கிறது!

## திமுக எதிர்ப்பு வாக்குகளுக்கு குறி

இது குறித்து அரசியல் விமர்சகர் ரிஷி கூறும்போது, அண்ணா திமுக பாஜக கூட்டணி பிரச்சினையில் அண்ணாமலையை சுற்றி பல வதந்திகள் உலா வந்தன. அண்ணாமலை மாற்றப்படுவார் என்றும் நீக்கப்படுவார் என்றும் அண்ணாமலை மீது டெல்லி தலைமை கோபமாக இருப்பதாகவும் மத்திய அமைச்சர்கள் அண்ணாமலைக்கு எதிராக ரிப்போர்ட் கொடுத்ததாகவும் பல செய்திகள் வந்தன.

ஆனால் டெல்லி சென்று திரும்பிய அண்ணாமலை திமுகவிற்கும் பாஜகவுக்கும் நான் போட்டி எனவும், கூட்டணி விட்டு யார் சென்றாலும் நான் வருத்தப்பட போவதுமில்லை மகிழ்ச்சி அடையப்போவதுமில்லை எனவும் கூறி தன்னை நிலைநிறுத்தி கொண்டார். அண்ணா திமுக தலைமையை தற்போது விமர்சிப்பதை மட்டுமே தவிர்த்து உள்ளார்.

குறிப்பாக அண்ணாமலை டெல்லியில் இருந்து வருவதற்கு முன்பு கூட்டணி குறித்து மாறுபட்ட கருத்துக்களை தெரிவித்து வந்த பாஜக இரண்டாம் கட்ட நிர்வாகிகள், தற்போது அது போன்ற கருத்துக்கள் எதையும் தெரிவிப்பதில்லை. இதன் மூலம் தமிழக பாஜகவில் தான் அசைக்க முடியாத சக்தி என்பதை அண்ணாமலை நிரூபித்துள்ளார். தற்போது தமிழக அரசியலில் ஒரு தலைவராக உருவாவதற்கான வேலையை செய்து கொண்டிருக்கிறார். 39 தொகுதிகளுக்கும் பாஜக சார்பில் கமிட்டி போட்டுள்ளார்.

தற்போது அவர் முன் இருக்கும் அடுத்த சவால் அண்ணா திமுகவை தவிர்த்து உங்கள் கூட்டணியை 2014 பாணியில் கட்டமைப்பது. அதற்கு ஓ பன்னீர்செல்வம், அன்புமணி ராமதாஸ், டிடிவி தினகரன் ஆகியோரை சரியான வழியில் எவ்வாறு ஒருங்கிணைக்கிறார் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம் என்றார் ரிஷி.




# Modern Treatment Relies on Technology

**- Dr. Madeswaran,** *Managing Trustee, Royal Care Trust*

Madhumitha.R, THE COVAI MAIL

Royal Care Trust proudly inaugurated the Institute of Nursing by organizing an event at Gokulam Park, Coimbatore, on October 4, 2023.

Approved by the Government of Tamil Nadu, affiliated with Tamil Nadu Dr. MGR Medical University, and recognized by the Tamil Nadu Nurses & Midwives Council and Indian Nursing Council, this institute has begun its journey with 100 B.Sc. Nursing seats and 40 GNM seats, setting a course for excellence in nursing education.

Dr. Narayanasamy, Vice-Chancellor of TamilNadu Dr. MGR Medical University, graced the occasion as the Chief Guest.



*Chief Guest Dr. Narayanasamy, Vice-Chancellor of TamilNadu Dr. MGR Medical University, in the presence of Dr. Madeswaran, Managing Trustee, Royal Care Trust, Dr. Thilagavathy Roy, Principal of the Royal Care Institute of Nursing, and Prof. Dr. Asokan, Dean of Royal Care Super Speciality Hospital, lighting the lamp in the Royal Care Nursing Institute inauguration event held recently.*

**MRgFUS Breakthrough for Parkinson's**

*- Dr. Madeswaran, Managing Trustee, Royal Care Trust*

He outlined the impressive journey of Royal Care Hospital and its dedication to excellence in healthcare and education. He emphasized the hospital's unwavering commitment to technology, stating, "From day 1, the hospital started running with technology. We felt we needed technology. Without technology, modern treatment is not there."

The rapid acquisition of advanced medical technology propelled the hospital to a position of promi-nence, providing effective treatments for various ailments.

He proudly announced that Royal Care Hospital became the first in the subcontinent to offer MRgFUS treatment for Parkinson's disease, marking a significant milestone in medical innovation.

"We've started this institute to train good nurses for the entire world, not just for Royal Care," he clarified. He praised the curriculum of Dr. MGR Medical University Nursing College and its potential global impact, stating that if followed diligently, it could produce top-notch medical professionals worldwide.

Dr. Madeswaran urged professors to prepare students to serve anywhere in the world, emphasiz-ing that "There is no requirement that students spend a few years working in a hospital after com-pleting their studies at the Royal Care College to get a degree certificate.

He concluded by reminding everyone of the profound impact they could have globally, saying, "Remember, it is important; you are going to serve the entire world with your knowledge and compassion."

**MGR University's Research Initiatives**

*- Dr. Narayanasamy, VC, Dr. MGR Medical University*

He extolled the nursing profession as a "boon to healthcare." He lauded the exemplary dedication of nurses during the COVID-19 pandemic, stating, "The care given by the nurses during the pan-demic was excellent." He emphasized three key pillars for nursing care: "dedication, sincerity, and devotion."

Highlighting the importance of research, he urged students to learn with research and called on institutions to train students in both practical and research aspects. He emphasized the need to integrate research into nursing curricula.

Commending Royal Care Hospital's adoption of MRgFUS, he emphasized, "Money isn't a matter, but the mind is so important." This highlighted the significance of innovative technology in healthcare.

He mentioned exciting development: "MGR University has started an undergraduate medical research program, expanding to all disciplines soon."

He announced the planning of the university to introduce online research programs.

He urged the management to support nurses in publishing their research by saying, "We must em-power nurses to conduct and publish research to enhance our nursing community. Management should fund their studies and facilitate publication in reputable journals."

> There is no requirement that students spend a few years working in our hospital after completing their studies at the Royal Care Insititute to get a degree certificate.



**Humanitarian Touch is Important**

*- Prof. Dr. Asokan, Dean, Royal Care Hospital*

He passionately underscored the significance of infusing a humanitarian touch into the realm of healthcare. In his insightful commentary, he articulated that while various avenues exist for finan-cial pursuits, the ethical and compassionate aspects of providing healthcare stand unparalleled.

Drawing attention to a pertinent issue, he pointed out the variance in the quality of critical care be-tween the government and private sectors.

According to him, the private sector, especially this hospital, excels in delivering superior treatment for critical conditions.

**Shaping Best Nurses**

*- Dr. Thilagavathy Roy, Principal, Royal Care Institute of NursingHospital*

He conveyed heartfelt appreciation to supporters for establishing the Royal Care Nursing Institute.

Gratitude extended to teachers, acknowledging their heroic impact on students' lives with the sentiment, "To the world, you may be just a teacher, but to your students, you're a hero." She thanked parents, aligning with Gandhiji's belief that every home is a university, and parents are its teachers and emphasized the synergy between college and family, citing positive outcomes for students.

Wishing students success, she assured them of the institute's commitment to shaping not just nurses but the best nurses, fostering a positive, healthy, and lifelong learning environment.

## Kumaraguru College hosts its 3rd Rotaract Installation



The Covai Mail

Kumaraguru College of Liberal Arts and Science held its 3rd Rotaract installation on October 4, 2023.

Abiraami Devi, installed as the President of the Rotaract Club, in the presence of Chief Guest PDG Rtn. Kuriachan. The Rotaract oath, emphasizing commitment and responsibility, was administered by Faculty Coordinator Rtn. Nanjan Balu. Office bearers received their appointment letters and badges from Chief Guest PDG Rtn. Kuriachan and College Principal Vijila Edwin Kennedy solemnly pledged their dedication to Rotaract's principles. Special guest Rtr. Sanjay, GRR, delivered an inspiring address, urging members to uphold service and community values.

The Chief Guest's motivational speech stirred hearts, setting the tone for a renewed commitment to service. Principal's words infused the office bearers with hope and purpose as they assumed their roles.

The symbolic passing of the charter to the new Secretary, Rtr. Shalini, marked the ceremony's conclusion, signifying the Rotaract Club's mission continuity and the seamless transition of leadership.

## Catalyst PR receives National First Prize



The Covai Mail

The Public Relations Council of India has conferred the National First Prize in the 'Best Use of Social Media' category to Catalyst Public Relations Pvt Ltd in the 17th International Conference of Public Relations Council of India recently held in New Delhi.

In this event, B. V. Vittal, the Executive Director of the Human Resource Department of National Fertilizers Company presented the award to Ramkumar Singaram, Chief Executive Officer of Catalyst PR.

This national award was given for creating awareness of public relations service on social media like Facebook, and Instagram for 52 consecutive weeks, posting 52 posts and reaching almost 8 lakh people.

To Advertise in
THE COVAI MAIL
84898 12341
84895 12341
covaimailads@gmail.com
report2tcm@gmail.com

THE COVAI MAIL

**Disclaimer:** The readers are advised to check with the authenticity of the organisations that are advertising in our newspaper before taking action in any way. The Owner and Publisher of this newspaper are not in any way responsible for the genuineness of the advertisements / advertisers and their products and services. If anybody suffers a loss or damage because of the advertisements published in this newspaper, then the owner, publisher, printer, editor and employees can be responsible under no circumstance as stated earlier.


## Kongunadu College Hosts ISRO's Space Expo 2023 *(...Continued from Page 1)*




**- Shanmuganathan,** Former Governor of Meghalaya, Manipur and Arunachal Pradesh

"Indian's pride lies in its space research, which is a testament to the tireless efforts and knowledge of Indians," he expressed. He emphasized that science thrives on the spirit of questioning, and this inquisitiveness is deeply rooted in the Indian thought system.


During his speech, he shared personal anecdotes from his experiences, including his interactions with the esteemed Dr. Abdul Kalam. He concluded by stressing the significance of every student achieving something meaningful in their lives and offered his heartfelt prayers for their success.




**- Balakrishnan,** Commissioner of Police, Coimbatore

The commissioner voiced concerns over the lack of goals among college students, emphasizing the role of achievements as inspiration, citing Chandrayaan 3's success. Stressing equal potential in all, he noted the varying effort required for transformation.

Regarding WSW 2023 space expo, he deemed it vital for Coimbatore, citing its contribution to affordable communications. Recognizing India's role in global space programs, he underlined the transformative impact of communication technology on our lives.




**- Palanisamy,** Chairman, Aerospace Materials Private Limited, Kovilpalayam,

He highlighted the significance of parents by stressing their importance in our lives. Reflecting on the selection of his product, Carbon Clothing, by ISRO, he remarked, "There, we learn the true meaning of perseverance."

Palanisamy praised ISRO's simplicity, linking it to high status. He underscored the roles of soldiers and scientists in nation-building, encouraging individuals to contribute to society. His call to be physically fit and mentally alert resonated with a warrior's mindset.




**- Sankaran,** Chief General Manager, SMP & ETF, SDSC SHAR, ISRO

Sankaran commended the physics department students for their tireless efforts in explaining projects to thousands of visitors. Acknowledging the challenges of Chandrayaan 1 and 2, he highlighted the global impact of their failures.

Proudly expressing ISRO's confidence in Chandrayaan 3, he elucidated the difference between arrogance and pride, emphasizing the organization's commitment to learning from past experiences while maintaining a sense of accomplishment and optimism for future endeavours in space exploration.




*Chief Guest Shanmuganathan, Former Governor of Meghalaya, Manipur, and Arunachal Pradesh, and Sankaran, Chief General Manager, SMP & ETF, SDSC SHAR, ISRO, along with C.A.Vasuki, Secretary & Director and Dr.O.N.Paramasivan, Treasurer of KASC distributing prizes to the school students who won in the competitions held as part of World Space Week 2023.*

Reg. No. TNBIL/2014/55455. Postal Registration No: CB/123/2021-23. Owned, Published and Printed by K.C.Srinivasan and published from 5/1, Athanur Amman Kovil Street, Ganapathy, Coimbatore - 641006 and Printed at Sri Saraswathy Printers, 5/1, Athanur Amman Kovil Street, Ganapathy, Coimbatore - 641006. Editor: K.C.Srinivasan